## இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் - 2016

இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2014 இன் 31 ஆம் இலக்க சமுத்திர பல்கலைக்கழகச் சட்டத்தின் 51(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த காலப்பகுதிக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் காணப்படுகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கை

அரசாங்கத்திடமிருந்தும் ஏனைய செயற்திட்டங்களிலிருந்தும் கிடைத்த மூலதன மானியத்தைப் பயன்படுத்தி ரூபா 655,908,762 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்கள் வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்ற போதும் அந்த மூலதன மானியம் காலக்கழிவு செய்யப்பட்டு கணக்குகளுக்கு எடுக்கும் கொள்கையொன்று பல்கலைக்கழகத்தால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 01**

நியமத்தின் 53 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் ஒப்பீட்டு ரீதியான பெறுமதி காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 47 ஆம் பந்தியின் பிரகாரம், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்களின் நியாயமான பெறுமதி கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் மாற்றமடையும் போது மீள் கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற தேறிய பெறுமதி ரூபா 358,189,699 தொகையான நிறுவனத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பன மீள் கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நியமத்தின் 21 ஆம் பந்திக்கு முரணாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட வாகன பழுதுபார்த்தல்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 913,446 தொகையான செலவினம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்திற்குரிய ஊழியர் சேமலாப நிதியப் பெறுமதி ரூபா 1,895,481 ஆக இருந்தபோதிலும், அது ரூபா 10,713,512 ஆக கணக்கீடு செய்யப்பட்டமையால் ஊழியர் சேமலாப நிதியக் கணக்கின் மீதியும் அட்டுறு செலவினத்தின் கீழான ஊழியர் சேமலாப நிதியக் கணக்கின் மீதியும் ரூபா 8,818,031 தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மட்டக்குளி தலைமை அலுவலக வளவில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட ஐந்து மாடி விரிவுரை மண்டபக் கட்டிடத்தின் மதிப்பீட்டினைத் தயாரித்தல் மற்றும் மண் பரிசோதனைக்காக செலுத்தப்பட்ட ரூபா 6,457,682 கூட்டுமொத்தம் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) தங்காலை கல்லூரியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட வேலைத்தளம் மற்றும் விரிவுரை மண்டபக் கட்டிடத்திற்காக செலுத்தப்பட்ட 30 சதவீத முற்பணத் தொகையான ரூபா 3,693,591 முற்பணத்தின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள முன்னைய ஆண்டு சீராக்கங்களின் பெறுமதியான ரூபா 342,280 தொகை காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதியல்லாத சீராக்கத்தின் கீழ் வரிக்கு முந்திய நட்டத்தில் சீராக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய ஆண்டிற்காகவும் செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) மீளாய்வாண்டில் காகிதாதிகள் மற்றும் அலுவலகச் செலவினங்களின் நுகர்வு ரூபா 5,082,605 ஆக இருந்தபோதிலும், இது ரூபா 4,360,436 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக காகிதாதிகள் செலவினம் ரூபா 722,169 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டிற்குரியதாக அறவிட வேண்டிய பாடநெறிக் கட்டணம் மற்றும் மாணவர் விடுதிக் கட்டணம் என்பன கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) நிதிக்கூற்றுக்களில் நடைமுறைச் சொத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டு முதல் கொண்டு வரப்படுகின்ற இனங்காணப்படாத ரூபா 85,433 தொகையான தொங்கல் கணக்கின் மீதியை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு முன் நீண்டகாலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 4,953,511 தொகையான பெறவேண்டிய வைப்பு மற்றும் முற்பணங்களின் ரூபா 2,009,844 கூட்டுத்தொகையான நிறுத்தி வைத்தல்களுக்குரிய தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடவேண்டிய பட்ட பாடநெறிக் கட்டணம் ரூபா 15,754,623 இனால் 2001 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 5,913,500 தொகை முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் அந்தப் பணம் அறவீடு செய்யப்படாமல் மாணவர்களின் பட்டச் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தமையால் அப் பணத்தை அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டது. மேலும், 2009/2010 ஆம் ஆண்டு முதல் 2015/2016 ஆம் ஆண்டு வரை பட்டம் மற்றும் ஏனைய பாடநெறிகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 9,841,123 தொகையான பாடநெறிக் கட்டணமும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2001 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக முன்கொண்டு வரப்படுகின்ற மாணவர் விடுதிக் கட்டணம் ரூபா 798,671 தொகை விடுதி மாணவர்கள் வெளியேறிச் சென்றமை அல்லது அனேகமானவை காலங்கடந்திருந்தமையாலும், சுனாமி கடனாக அறவிட வேண்டிய ரூபா 191,464 தொகை அக்கடனைப் பெற்ற உத்தியோகத்தர்கள் தற்போது சேவையில் இல்லாதிருந்தமையாலும், அறவிடுதல் நிச்சயமற்ற நிலையில் காணப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) முன்னைய ஆண்டு மற்றும் அதற்கு முந்திய ஆண்டுகளிலிருந்து முன்கொண்டு வரப்பட்ட ரூபா 11,210,663 பெறுமதியான அட்டுறு செலவினங்களைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2014 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 31 ஆம் இலக்க சமுத்திர பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 10(1), 13(1), 18, 24(1), 28 ஆம் பிரிவுகள் | தொடர்புடைய பிரமாணத்தின் பிரகாரம் வேந்தர் மற்றும் பீடாதிபதிகள் நியமிக்கப்படாதிருந்ததுடன் நிறைவேற்று சபை, கலைச்சபை மற்றும் சபைகளைத் தாபிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | |
| (i) VIII ஆம் அத்தியாயத்தின் 6.1 ஆம் பிரிவு | மாதாந்த அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரப்படி மற்றும் விடுமுறை தினச் சம்பளம் என்பன கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மொத்தச் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு மேலதிக நேரப்படி செலுத்தப்பட்டிருந்தது. |

| | | |
|---|---|---|
| | (ii) XV ஆம் அத்தியாயத்தின் 5.1 மற்றும் 10.1 ஆம் பிரிவுகள் | தங்காலைக் கல்லூரியில் சேவையில் ஈடுபட்டிருந்த விரிவுரையாளர் பதவியில் இருந்த ஒரு பெண் உத்தியோகத்தர் 2016 பெப்ரவரி 23 ஆந் திகதி முதல் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை வெளிநாட்டு புலமைப்பரிசிலுக்காக சம்பளத்துடன் கற்கை விடுமுறை அங்கீகரிக்கப்படாமலும், பிணை முறி மற்றும் உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலும் நாட்டிலிருந்து வெளியேறிச் சென்றிருந்ததுடன் அந்த உத்தியோகத்தருக்காக 2016 மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களுக்குரிய சம்பளமாக ரூபா 125,870 தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | இலங்கை சனநாயகக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>---------------------------------------------------- | |
| | (i) நிதிப்பிரமாணம் 394 | 2012 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படுகின்ற இரத்துச் செய்யப்பட்ட ரூபா 697,854 கூட்டுப்பெறுமதியான 55 காசோலைகள் தொடர்பாக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிப்பிரமாணம் 835(1), (2), (3) | (i) மாணவர் விடுதிக்கான 03 கட்டிடங்களுக்காக உரிய அமைச்சு செயலாளரின் அங்கீகாரமின்றி ஆரம்ப வைப்பாக ரூபா 1,650,000 தொகை வாடகையாளருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.<br><br>(ii) ஆரம்ப வைப்புப் பணத்தைச் செலுத்துவதற்குரிய நிந்தனைகள் சட்டமா அதிபரிடம் விசாரித்து ஆலோசனையொன்று உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தும் மேற்கூறப்பட்ட கட்டிடத்தை குத்தகைக்கு எடுக்கும் சந்தர்ப்பத்தின் போது அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்தக் கட்டிடங்களில் உள்ள பொருட்கள் மற்றும் பொருத்திகள் தொடர்பான பட்டியலும் வாடகை உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | தேறிய பெறுமதி ரூபா 437,451,967 தொகையான நிலையான சொத்துக்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாகப் பேணப்படாதிருந்ததுடன் ரூபா 31,211,626 கிரயமான கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பாகவும் சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2011 ஏப்ரல் 28 ஆந் திகதிய 955 ஆம் இலக்க பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை | ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றின் பங்களிப்புக்களை கணிப்பீடு செய்யும் போது சம்பளத்துடன் செலுத்தப்படுகின்ற கற்கைப்படிகள் உள்ளடக்கப்பட முடியாதிருந்த போதிலும், பல்கலைக்கழகம் அதற்கு முரணானதாக நடவடிக்கை எடுத்திருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 81,951,775 பற்றாக்குறையாக இருந்ததுடன் முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 47,358,479 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் ரூபா 34,593,296 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் மானியம் மற்றும் துறைசார் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திலிருந்து கிடைத்த மானியம் ரூபா 41,425,816 இனால் அதிகரித்திருந்த போதிலும், ஏனைய வருமானம் ரூபா 27,179,867 இனால் குறைவடைந்தமை மற்றும் முறையே சம்பளம், பெறுமானத்தேய்வு மற்றும் தொலைபேசி, மின்சாரம், நீர், சுகாதார வசதிகள் போன்ற உடன்படிக்கை செய்யப்பட்ட சேவைச் செலவினங்கள் ரூபா 24,926,636, ரூபா 11,566,163 மற்றும் ரூபா 10,008,622 இனால் அதிகரித்தமை இதற்குப் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2014 இன் 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் நோக்கங்கள் பின்வருமாறாகும்.

- கடற்றொழில், சமுத்திர ஆய்வு, சமுத்திர தொழில்நுட்பம் மற்றும் சமமான துறைகளில் பல்கலைக்கழக கல்வியினை வழங்குவதற்கான ஏற்பாடுகளைத் திட்டமிட்டு தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட பரந்த பாடநெறிகளுக்கான ஏற்பாடுகளை கையளித்தல்.

- ஏதாவதொரு பிரதேசத்தில் மனித வலுவின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கடற்றொழில் மற்றும் அதற்குச் சமமான துறைகளுக்குரிய தொழில்சார் மற்றும் தொழில்நுட்ப கற்கை பாடநெறிகளுக்காக சந்தர்ப்பங்களை வழங்குதல் மற்றும் கடற்றொழில், சமுத்திர மற்றும் சமுத்திரப் பிரிவுகளுக்குரிய அனுபவங்களை பரவலாக்குதல்.

- பல்கலைக்கழகத்திற்கு அனுமதிப்பதற்காக கடற்றொழில் மற்றும் சமமான துறைகளின் ஊழியர் குழாத்திற்காக தொழில்சார் தொழில்நுட்பப் பாடநெறிகளை வழங்குதல்.

- கடற்றொழில், சமுத்திர ஆய்வு ரீதியான, தொழில்நுட்ப ரீதியான மற்றும் சமமான துறைகளில் பல்கலைக்கழக கல்வியொன்றை பெற்றுக்கொள்வதற்கு மாணவர்களுக்கு உள்ள திறமை மற்றும் இயலுமையின் அடிப்படையில் பொறியியல் பயிற்சி, ஆய்வு ரீதியான, தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் கல்வி மற்றும் பயிற்சியளித்தல் முறைமை போன்ற துறைகளின் செயல்முன்னேற்ற அபிவிருத்திக்காக ஏற்பாடுகளைத் திட்டமிடல் மற்றும் அவர்களின் திறனை மேம்படுத்துவதற்காகவும், கலைசார் தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காகவும் அவர்களுக்கு உதவுதல்.

(அ) மேற்கூறப்பட்ட நோக்கங்களில் பல்கலைக்கழகத்திற்கு உள்ளீர்த்துக் கொள்வதற்காக கடற்றொழில் மற்றும் சமமான துறைகளின் ஊழியர் குழாத்திற்காக தொழில்சார் தொழில்நுட்ப பாடநெறியை வழங்குதல் தொடர்பில் பல்கலைக்கழகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**(ஆ) மாணவர்களைச் சேர்த்தலும் பாடநெறிகளை நடாத்துதலும்**

---

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 97 பாடநெறிகளை நடாத்துவதற்கும், அதற்காக 2,360 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பட்டம், டிப்ளோமா மற்றும் சான்றிதழ் பத்திர பாடநெறிகளுக்காக 08 கல்லூரிகளுக்கு சேர்த்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த மாணவர்களின் எண்ணிக்கை 1,565 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் 596 மாணவர்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தமையால் மொத்த மாணவர் சேர்க்கும் செயல்முன்னேற்றம் 38 சதவீதமாக இருந்தது. அதில் திருகோணமலை கல்லூரி தவிர ஏனைய கல்லூரிகளுக்கு சேர்த்துக் கொள்ளும் செயல்முன்னேற்றம் 50 சதவீதத்தை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டதுடன் மட்டக்குளி மற்றும் களுத்துறை கல்லூரி என்ற இரண்டினதும் செயல்முன்னேற்றம் முறையே 20 சதவீதம் மற்றும் 21 சதவீதம் என்ற மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது.

(ii) திருகோணமலை தவிர ஏனைய 07 கல்லூரிகளிலும் 04 டிப்ளோமா பாடநெறிகளை நடாத்துவதற்காக 225 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மட்டக்குளி மற்றும் நீர்கொழும்பு கல்லூரிகளுக்காக 37 மாணவர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர். மிகுதி 05 கல்லூரிகளிலும் ஒரு பாடநெறியேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) 08 கல்லூரிகளில் 15 சான்றிதழ் பத்திர பாடநெறிகளை நடாத்துவதற்கும் 1,165 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கும் இலக்கிடப்பட்டிருந்த போதிலும், அதற்காக 403 மாணவர்களை மாத்திரமே சேர்த்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது. அதன் பிரகாரம் சான்றிதழ் பத்திர பாட நெறிகளுக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும் செயல்முன்னேற்றம் 35 சதவீதமாக இருந்தது.

(iv) 06 நடைமுறைப் பயற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், 05 வேறு நிகழ்ச்சித்திட்டங்களையும் 06 கல்லூரிகளில் நடாத்துவதற்கும் அதற்காக 815 மாணவர்களைப் பங்குபற்றச் செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், எந்தவொரு கல்லூரியிலும் அந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த வேறு 04 நிகழ்ச்சித்திட்டங்கள் 07 கல்லூரிகளில் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக 500 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

(v) பட்டப் பாடநெறிகளுக்காக 175 மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு இடவசதிகள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் அதற்காக 156 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அந்த ஆட்சேர்த்தலை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 69 பேர்களின் அதாவது 44 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2015 யூன் 18 ஆந் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்ட சமுத்திர பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைச் சேர்த்தலும் பாடநெறிகளை நடாத்துதலிலும் போதியளவான செயல்முன்னேற்றமொன்றை 2016 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அடையப்பெற்றிருக்கவில்லை.

(vi) பல்கலைக்கழகத்திற்குரிய 08 பிரதேச கல்லூரிகளில் 02 கல்லூரிகளில் மாத்திரம் NVQ பரீட்சை நடாத்தப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது NVQ சான்றிதழ் 30 மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(vii) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் மட்டக்குளி கல்லூரியில் பட்டப் பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்ட 114 மாணவர்களில் 39 மாணவர்கள் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர்.

**(இ) சர்வதேச நியமங்கள் நிறுவனத்தில் (ISO) தரச்சான்றிதழ் பெறல்**

04 கல்லூரிகளில் 04 பாடநெறிகளுக்காக சர்வதேச நியமங்கள் நிறுவனத்தில் (ISO) தரச் சான்றிதழ் பெறுவதற்கான மதியுரைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு தனியார் நிறுவனமொன்றுடன் ரூபா 2,500,000 இற்கு 2012 திசெம்பர் 21 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அதற்காக மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 1,207,500 முற்பணமொன்று செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2018 மார்ச் மாதம் இறுதி வரையிலும் யாழ்ப்பாணம் மற்றும் நீர்கொழும்பு கல்லூரிகளுக்காக (ISO) தரச் சான்றிதழ் பெறப்பட்டிருந்தது. மேலும், உடன்படிக்கை செய்யப்பட்ட மதியுரைச் சேவைகளை வழங்குதல் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி தொடர்பாக உடன்படிக்கையின் நிபந்தனைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மட்டக்குளி மாணவர் விடுதி 2015 மார்ச் 31 ஆந் திகதி வாடிக்கையாளருக்கு மீளக் கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2017 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலான ரூபா 840,000 தொகையான ஆரம்ப வைப்புப் பணத்தை மீளப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்கலைக்கழகத்தினால் கையேற்கப்பட்ட தேசிய கடற்றொழில் மற்றும் கப்பல் பொறியியல் நிறுவகத்தின் ஆரம்பத்திலிருந்து பயன்படுத்தப்படுகின்ற தலைமை அலுவலகத்தை உள்ளடக்கியதாக பிரதேசத்தில் அமைந்துள்ள 08 கல்லூரிகளில் காணி கட்டிடங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களின் உரித்தை பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 நிதியத்தின் குறைந்த பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூலதனச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்காக மீளாய்வாண்டில் ரூபா 81.69 மில்லியன் தொகை அரசாங்கத்திலிருந்து மானியமாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 52.14 மில்லியன் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட படி அரசாங்கத்தின் மானியத்தைப் பயன்படுத்திக் கொள்வதற்கு முகாமைத்துவம் தவறியமையின் காரணமாக ரூபா 29.55 மில்லியன் அதாவது 36 சதவீதம் குறைப்பயன்பாடுடையதாகக் காணப்பட்டது.

(ஆ) துறைசார் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூடம், வேலைத்தளம் மற்றும் வகுப்பறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்ட ரூபா 30

மில்லியன் நிதிஏற்பாட்டைப் பயன்படுத்தி உரிய அபிவிருத்திகளைச் செய்வதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

**4.4 இனங்காணப்பட்ட நட்டம்**

மட்டக்குளி பிரதான அலுவலகத்தில் ஐந்து மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடொன்றைத் தயாரித்தல் மற்றும் மண் பரிசோதனைக்காக 2016 யூலை மாதம் ரூபா 6,457,682 தொகை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கும் இன்ஜீனியரிங் என்ட் லெபோறட்டரி சேர்விசஸ் தனியார் கம்பனிக்கும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 பெப்ரவரி இறுதி வரையிலும் உரிய நிர்மாணங்களை ஆரம்பிப்பதற்கேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிதிஏற்பாடு கிடைக்காமையின் அடிப்படையில் இந்த நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததாக உபவேந்தரால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்குச் சொந்தமான 29 வாகனங்களில் 08 வாகனங்கள் நீண்டகாலமாக செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 திசெம்பர் 14 ஆந் திகதி ரூபா 1.6 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட கப்பல்களுக்கு வெளியே பொருத்தும் 02 என்ஜீன்கள் 2017 செப்தெம்பர் 21 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 2.5 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட 02 லேத் இயந்திரங்களும் நிலையத்தில் அமைக்கப்பட்டு மின் இணைப்பு வழங்கப்படாமையின் காரணமாக பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு முடியாமல் விளைவற்றுக் காணப்பட்டன.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 327 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 199 ஆனமையால் 128 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் வெற்றிடங்களுக்காக நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரத்தைப் பெறாது ஒப்பந்த மற்றும் தற்காலிக அடிப்படையில் 14 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,006,866 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 பல்கலைக்கழகத்தைத் தாபித்தல்**

2014 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 01 ஆம் இலக்க மற்றும் 71 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய அமைச்சரால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட திகதியான 2015 யூன் 17 ஆந் திகதிய 1999 இன் 36 ஆம் இலக்க தேசிய கடற்றொழில் மற்றும் கடல்சார் பொறியியல் நிறுவக

அதிகாரச்சட்டம் முடிவுறுத்தப்பட்டு அந்த நிறுவகத்தில் காணப்பட்ட சகல அசையும் மற்றும் அசையாத ஆதனங்களும், அத்திகதியில் உள்ளவாறான பொறுப்புக்களும் கையேற்கப்பட்டு 2015 யூன் 18 ஆந் திகதி முதல் அமுலாகும் வகையில் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டது.

**5.2 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்கள சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் மீளாய்வாண்டிற்குரிய கணக்குகள் 2018 சனவரி 25 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது. கீழே காண்பிக்கப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நாட்குறிப்புப் பதிவுகள் பேரேட்டுக் கணக்குகளில் பதியும் போது குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை |
| (ஆ) சொத்துக்கள் முகாமைத்துவம் | சொத்துக்கள் சட்டரீதியாக கையேற்கப்படாமை மற்றும் சொத்துக்கள் குறைப்பயன்பாட்டுடன் காணப்பட்டமை |
| (இ) பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியினர் உரிய பிரகாரம் உள்ளீர்க்கப்படாமை மற்றும் வெற்றிடம் பூர்த்தி செய்யப்படாமை என்பவற்றின் காரணமாக திட்டமிடப்பட்ட பிரகாரம் பாடநெறிகளை நடாத்துவதற்கு முடியாதிருந்தமை. |
| (ஈ) விடுதிக் கட்டுப்பாடு | (i) விடுதி உப கட்டுப்பாட்டாளர் பதவிக்காக உத்தியோகத்தர் நியமிக்கபடாமை மற்றும் மாணவர்களுக்கு விடுதி வசதிகளை வழங்குவதற்கு முன் அதன் சட்ட விதிகள் தொடர்பாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்படாமை<br><br>(ii) மாணவர்களை விடுதிகளுக்கு உள்ளீர்த்தல் மற்றும் அகற்றுதல் போன்றவை தொடர்பான தகவல்களை அறிக்கையிடுவதற்கு பதிவேடொன்று பேணப்படாமை |